# தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

தமிழ்நாடு அரசு




- அடுத்த 7 வருடங்களில், உலகளவில் உயர் வருமானத்தைக் கொண்ட நாடுகளுக்கு நிகராக, தனிநபர் வருமானத்தில் 3 மடங்கு வளர்ச்சியினை அடைந்து, 2023 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் பொருளாதாரத்தில் வளமிக்க மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கும்.
- தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி முறையை வெளிப்படுத்தும் – இலாபகரமான மற்றும் பயனுள்ள வேலைகளைத் தேடும் அனைவருக்கும், வாய்ப்புகளை வழங்கி, வறுமையில்லா மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து, பாதிக்கப்பட்டவர்கள், நலிவுற்ற பிரிவினர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு பராமரிப்பு அளிக்கும்.
- சமுதாய மேம்பாட்டில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக விளங்கி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே மனித மேம்பாட்டு குறியீட்டில் உயரிய இடத்தைப் பெறும்.
- தமிழ்நாடு, பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் உயர் மனித திறமையின் மூலம் புதுமை மையமாகவும் அறிவாற்றலில் இந்தியாவின் தலைநகரமாகவும் விளங்கும்.
- தமிழ்நாடு, அதனுடைய சூழலியல் மற்றும் அதனுடைய பாரம்பரியத்தை என்றென்றும் பாதுகாக்கும்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | செயலாக்க சுருக்கம் | – | 04 |
| 2. | முன்னுரை | – | 07 |
| 3. | தனிச்சிறப்பு வாய்ந்த இளைஞர் கொள்கைக்கான அடிப்படைக் கோட்பாடு | – | 08 |
| 4. | தொலை நோக்கு | – | 12 |
| 5. | குறிக்கோள் | – | 12 |
| 6. | நோக்கம் | – | 12 |
| 7. | இளைஞர்கள் என்பதன் வரையறை | – | 14 |
| 8. | வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள் | – | 14 |
| 9. | இலக்கு குழுக்கள் | – | 17 |
| 10. | முன்னுரிமை குழுக்கள் | – | 17 |
| 11. | உத்தி | – | 18 |
| | அ. அறிவு பரவலாக்கம் மற்றும் குடிமை பங்கேற்பை ஏற்படுத்துதல் | – | 19 |
| | ஆ. முக்கிய பகுதிகளில் செயலாக்கம் | – | 21 |
| | இ. மதிப்பீடு, கண்காணித்தல் மற்றும் மறு ஆய்வு | – | 34 |
| 12. | செயலாக்கத் திட்டம் | – | 36 |
| 13. | தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கையின் மறு ஆய்வு | – | 39 |
| 14. | பார்வைகள் | – | 40 |

## 1. செயலாக்க சுருக்கம்

இளைஞர்களே ஒரு நாட்டின் மிகப்பெரிய சொத்தும், வலிமையும் ஆவர். ஒரு நாட்டின் இளைஞர்களின் திறமையே அந்நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய கூறாக அமைகிறது. இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் மனிதவளத்தின் உயர்படி நிலையாக அமைவதால், அவர்கள் சமூகத்தில் புதுமையான முயற்சி மற்றும் மாற்றத்திற்காக இணைந்து பணியாற்றி சமூக மேம்பாட்டிற்காக முழுமையாக பங்கேற்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்க அவர்களது அர்ப்பணிப்பை வலுப்படுத்துவது நாடுகளுக்கு இன்றியமையாததாகும்.

அவன் /அவள் கட்டாயக் கல்வியை முடித்து அவனின்/அவளின் முதல் வேலையைத் தேடிக்கொள்ளும் வயது கொண்ட நபரே இளைஞர் என குறிக்கப்படுகிறார். இளைஞர் வயதுப் பிரிவு என்பது வெவ்வேறு நாடுகள் / முகமைகளால் வெவ்வேறாகவும் மற்றும் ஒரே முகமையால் வெவ்வேறு நிலைகளிலும் வரையறுக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் இளைஞர்களை 15 லிருந்து 24 வயதுக்குட்பட்டவர்கள் என வரையறுத்துள்ளது.

பல்வேறு கொள்கை குறுக்கீடுகளைப் பொறுத்தவரையில் விரிவான அணுகுமுறையைக் கருத்தில் கொண்டு 'இளைஞர்' என்பவர் 15–29 வயது வரையிலான வயது பிரிவினைச் சேர்ந்தவர்கள் என 2014 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் கொள்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை விவரப்படி, தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை இளைஞர்களை 15–35 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களாக வரையறுக்கிறது.

ஆக்கப்பூர்வமான வயதுப் பிரிவில் சுமார் 74% மக்கள் தொகையைக் கொண்டு, அவர்களின் பயன்பாட்டினை வெளிக்கொணரும் ஆற்றல் கொண்ட முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.

இந்தியாவில், பரப்பளவில் பதினோராவது பெரிய மாநிலமாகவும் மக்கள் தொகை அளவில் ஏழாவது பெரிய மாநிலமாகவும் உள்ள தமிழ்நாடு, 2012ஆம் ஆண்டின்படி மாநில பொருளாதாரத்தில் நாட்டில் இரண்டாவது பெரிய மாநிலமாகத் திகழ்கிறது.

மாநில இளைஞர் கொள்கையானது "தொலைநோக்கு திட்டம் 2023"–ன் பரந்த நோக்கங்களை வலுப்படுத்துவது மற்றும் நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டை புதுமை மையம் மற்றும் அறிவாற்றலில் இந்தியாவின் தலைநகரமாக மாநிலத்தை மாற்றும் பொருட்டு மனித வளத்தை மேம்படுத்த கவனம் செலுத்துகிறது.

முன்னேற்றம், வளர்ச்சி மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்க பொறுப்பான பங்களிக்கக்கூடிய குடிமகனாக ஒவ்வொரு இளைஞனையும் மேம்படுத்தி மாநிலத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதே இக்கொள்கையின் நோக்கமாகும். ஆரோக்கியமான, அமைதியான, ஆக்கப்பூர்வமான, நேர்மறையான மற்றும் மதிப்பு சார்ந்த சூழலை உறுதி செய்து மாநிலத்தின் முழுமையானதும் நிலையானதுமான மேம்பாட்டுக்கான ஒரு சூழலை உருவாக்க இளைஞர்களின் திறனை பயன்படுத்துவதே இதனின் முக்கிய குறிக்கோளாகும். மேலும், மாநிலத்திற்குள்ளேயும் வெளியேயும் இளைஞர்களின் செயல்திறமுடைய மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்வை இது காட்சிப்படுத்துகிறது. இது இளைஞர்களை, கல்விகற்று, மதிப்புகள், அறிவு மற்றும் நல்ல மனப்பான்மையுடன் கூடிய திறனைப் பெறுவதை அவசியமாக்குகிறது. அனைத்து துறைகளிலும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்திற்கு அவர்களை கொண்டு செல்ல, அவர்களின் சிறப்பான முயற்சிகள் மாநிலத்தின் நிலையான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி இருக்க வேண்டும்.

மாணவர்கள், பள்ளிப்படிப்பு முடித்த இளைஞர்கள், கிராமப்புற மற்றும் நகர்புற இளைஞர்கள், பட்டியல் இன/பழங்குடியின இளைஞர்கள், கடலோர, பதட்டமான மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள இளைஞர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், புலம்பெயர்ந்த மற்றும் மூன்றாம் பாலின இளைஞர்கள் ஆகியோரை நெறிப்படுத்துவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இளம் பெண்கள், திறனற்ற இளைஞர்கள், குடிசைப்பகுதி இளைஞர்கள், மாற்றுத்திறனாளி இளைஞர்கள் மற்றும் இன்னலிலிருக்கும் இளைஞர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

இளைஞர்களிடையே மதிப்பு மற்றும் கலாச்சாரத்தினை ஊக்குவித்தல், முறையான கல்விக்கு அதிகமான வசதிகளை உருவாக்குதல்; முறை சாரா மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்க வாய்ப்புகளை ஊக்குவித்தல்; பயிற்சி வழங்கியும் வாழ்க்கைக்கான அணுகுமுறையை உருவாக்கியும் வேலைவாய்ப்புக்கான அணுகுமுறை மற்றும் திறனை வளர்த்தல், ஆரோக்கியமான மற்றும் சரிவிகித வாழ்க்கை முறைக்கான வாய்ப்புகளைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்; உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அருகாமையில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளில் ஈடுபட

ஊக்குவித்தல் மற்றும் மனித உரிமைகள், பாலின சமத்துவம் மற்றும் சமபங்கினை உணரவைத்தல்; உள்ளாட்சியில் பங்குபெற ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் சமுதாய தேவைகளை சமாளித்தல்; சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விவகாரங்களில் ஈடுபடுத்துதல் மற்றும் தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் **2023**ன் குறிக்கோள்களை அடைய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல் ஆகியவை இக்கொள்கையின் முக்கிய பகுதிகளாகும்.

இளைஞர் கொள்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அதை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதே வழியில் அனைத்து முக்கிய பங்குதாரர்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் இதில் ஈடுபடுத்தப்படும். இளைஞர் கொள்கையின் கீழ் நிகழ்ச்சிகளில் இளைஞர்கள் பங்குபெறுவது பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படும்.

இக்கொள்கையை செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை உறுதிசெய்தல், அதன் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் தேவைப்படின், இடைக்கால சீராய்வுக்கு திட்டமிடுவதற்கு காலமுறை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவை முன்மொழியப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுகளுக்குப் பின் இந்த கொள்கை மறுஆய்வு செய்யப்பட்டு எதிர்கால தேவைகளைப் பொறுத்து மாற்றங்கள் செய்யப்படும்.

## 2. முன்னுரை

வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சமூக, பொருளாதார, அரசியல், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டிற்கான பாதையை உருவாக்கும் சமூக மாற்றத்திற்கான காரணிகளாக இளைஞர்கள் உள்ளனர். மாற்றங்களை உருவாக்கும் இளைஞர் மூலமாக, தமிழ்நாட்டின் விரிவான தொலைநோக்குத் திட்டம் **2023–ஐ** செயல்படுத்துவதை தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு துறைகளில் இளைஞர்களுடைய அறிவாற்றல் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்துவதன் மூலமாக இம்மாநிலத்தினுடைய மனித மூலதனத்தை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தி, தமிழ்நாட்டை புதுமையை புகுத்தும் மாநிலமாகவும் அறிவாற்றலில் இந்தியாவின் தலைநகரமாகவும் மாற்றுவதாகும். நல்லொழுக்கம், நேர்மை, குடிமை விழிப்புணர்வு மற்றும் தேசியம் ஆகிய பண்புகளை வளர்த்தெடுப்பதோடு இளைய சமுதாயத்துக்கு இலாபகரமான மற்றும் பலனளிக்கக்கூடிய வேலை வாய்ப்புகளை இக்கொள்கை உருவாக்குதலை செழுமைப்படுத்தும்.

இளைஞருடைய ஆற்றல் மற்றும் உற்சாகத்தை நல்வழிப்படுத்தி, வலிமையான சமுதாயத்தை மற்றும் வலிமை பொருத்திய நாட்டை உருவாக்கும் விதத்தில் அவர்கள் ஆக்கப்பூர்வமாக பங்கேற்பதற்கு பரந்து விரிந்த வாய்ப்புகள் அவசியம் தரப்பட வேண்டும். இக்கொள்கையானது விளிம்பு நிலை குழுக்களால் இளைஞர்கள் வழிதவறிப்போவதைத் தடுத்து நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டில் போற்றி பேணப்படும் மதிப்புகளின் அடிப்படையில் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்க உதவிபுரியும்.

## 3. தனிச்சிறப்பு வாய்ந்த இளைஞர் கொள்கைக்கான அடிப்படைக் கோட்பாடு

தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கையானது, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தெள்ளத் தெளிவாக பிரதிபலிக்கிறது.


- மக்கள் நவீன சமூகத்தின் அனைத்து அடிப்படை வசதிகளை துய்த்து, சுற்றுச்சூழலுடனும், உலகத்தின் மற்ற நாடுகளுடன் இணக்கமான ஈடுபாட்டுடன் வாழக் கூடிய வகையில் வறுமை நீங்கி, இந்தியாவின் ஆக்கப்பூர்வமான மற்றும் செல்வச் செழுமையுள்ள மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்குவதே தொலைநோக்கு திட்டம் 2023 ஆகும்.
- உலகளாவிய இடை நிலைக் கல்வியையும், கல்லூரிகளில் 50 சதவீதத்திற்கு மேலாக மாணவர் சேர்க்கையையும் அதிகரிப்பதாகும் (தொழிற்கல்வி உட்பட) .
- தமிழ்நாட்டில் இளைஞர்கள் தங்களின் பணிகளில் போதுமான அளவு திறன் பெற்றிருப்பது உறுதி செய்யப்படும்.
- புதிய அறிவுத்திறன் உருவாக்குவதை தூண்டுவதற்கும், அதனை தொழில் முனைவோர்கள் பயன்படுத்துவதற்கும், பொருளாதார மற்றும் நிறுவன ஆட்சி முறை ஒன்று அமைக்கப்படும்.
- அறிவுசார் உடைமை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், வெற்றிகரமான புதுமைகளை போற்றுவதற்கும் உகந்த சூழ்நிலை உருவாக்குதல் மூலம் துணிவுடன் எதிர்கொள்ளும் பண்பு வளர்க்கப்படும்.
- மாணவர்கள், வியாபார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனையோர்களால் செய்யப்படும் புதிய முயற்சிகளுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் புதுமை நிதி ஒன்று ஏற்படுத்துதல்.
- இறுதியாக, எல்லைகளுக்கிடையே பணியாளர்கள் மற்றும் சரக்குகள்/சேவைகளின் போக்குவரத்தை அதிகரிக்கவும், இதர பகுதிகளுடன் கருத்துக்கள் மற்றும் கலாச்சார பரிமாற்றங்களின் அளவுகளை அதிகரிக்கவும், தமிழ்நாட்டிற்கு மக்கள் இயல்பாக வந்து செல்லக்கூடிய வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பரிமாணங்களில் தமிழ்நாடு ஏனைய மாநிலங்களோடும் உலகின் மற்ற பகுதிகளுடனும் கூட்டாக செயல்படும்.
- அடுத்துவரும் 7 ஆண்டுகளில் ரூ.11,000 கோடி செலவில், 20 மில்லியன் நபர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் அளிக்க கருதுகிறது. இதில், பணிச் சந்தையில்

நுழையும் 15 மில்லியன் மக்களும் ஏற்கனவே பணி செய்யும் 5 மில்லியன் மக்களும் அடங்குவார்கள்.

- பல்வேறு வாழ்வாதாரங்களுக்காக, மேல்நிலைக்கல்வி அளவில் படித்த, திறன் மேம்பாட்டிற்காக இலக்கிடப்பட்ட சுமார் 65 சதவீத நபர்களுக்கு அடிப்படை திறன்கள் மீதான பயிற்சி அளிக்கப்படும். தொழிற்பயிற்சி திட்டங்களின் பகுதியாக அல்லது கல்லூரிகளில் சுமார் 33 சதவீத நபர்கள் ஏற்கனவே முறையான கல்வியை பயின்றிருப்பார்கள். எஞ்சியுள்ள உயர்நிலையிலுள்ள 2 சதவீதத்தினர் மேல்நிலை வல்லுநர்களாக இருப்பர்.
- விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள், மாநில மக்கள் தொகையில் 40 சதவிகிதத்தினருக்கு வாழ்வாதாரம் அளிப்பதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதம் பங்களிக்கிறது. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 0.6 மில்லியன் மக்கள் தொழில் மற்றும் சேவைபிரிவு அலகுகளில் பணிகளை மேற்கொள்ள திறன் சாரா தொழிலாளர்களுக்கு (முதன்மையாக வேளாண்தொழிலாளர்கள்) தேவைப்படும் அடிப்படை பயிற்சிகளை வழங்கும் பெரிய அளவிலான திறன் மேம்பாட்டு புதுமுயற்சியாகும்.
- ரூ.3,000 கோடி செலவில் 10 முதன்மை மையங்கள் அமைத்தல்.
- தமிழ்நாட்டில் உயர்கல்விக்கான புகழ்பெற்ற நிறுவனங்களான IIT, IIM, IIIT, 23 மாநில பல்கலைக் கழகங்கள், 500க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளைக் கொண்ட நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களையும் சேர்த்து 40 தனியார் பல்கலைக்கழகங்கள், 1000 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் இருப்பதால், மாணவர்களை திறன்மிக்கவர்களாக்குவதற்கான அதிக கொள்திறன் உள்ளது. மாநிலத்திலுள்ள திறன்மிக்கவர்களில் குறிப்பிடத்தக்க விகிதத்தினர் வேலைவாய்ப்பு பெற தகுதியுள்ளவர்களாக இருப்பதற்கு இது காரணமாக உள்ளது. மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமான திறன்மிக்கவர்கள் பணியில் இருப்பதால், நாட்டின் ஒட்டு மொத்த சராசரியில், தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. தகவல் தொடர்பு, தர்க்க ரீதியான திறன் போன்ற பணியில் அமர்த்தத்தக்க தனிப்பட்ட திறன் பகுதிகளில் திறன்மிக்க திறமையாளர்களுடன் பணியில் அமர்த்தத்தக்க பெண்களை அதிக சதவீதத்தில் கொண்ட உயர்நிலையிலுள்ள 10 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்

- சாதகமான மக்கள் தொகை பங்கீடான 15–59 வயதுடைய பணிபுரியக்கூடிய வயதில் ஏறத்தாழ 74 சதவீத மக்கள் தொகை உள்ளது என மாநில மக்கள் தொகையின் வயது வாரியான பரவல் குறிப்பிடுகிறது. எனினும், நிலையான பிறப்பு விகிதத்தால், வரும் பத்தாண்டுகளில், இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு முன்பாக, இந்த மக்கள் தொகை பங்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ளும். எனவே, வளர்ச்சி விகிதத்தை நிலைப்படுத்துவதற்கு, தொழிலாளர் பங்களிப்பை ஊக்குவிப்பதன் வாயிலாகவும், தொழிலாளர் உற்பத்தியை மேம்படுத்துவதன் வாயிலாகவும், தற்போதைய சாதகமான அம்சங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவது இன்றியமையாததாகும்.

<u>**தமிழ்நாட்டில் பாலின பரவல்**</u>




- வளர்ந்து வரும் நாட்டில், உற்பத்தி திறனுடைய வயது பிரிவினர் அளிக்கக்கூடிய பங்களிப்பினால், தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் இளைஞர் மக்கள் தொகை முக்கியத்துவம் பெறுகிறது. மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 சதவீதத்தினர் இளைஞர்கள் என்றும் அதில் பெரும்பாலானோர் முறையான கல்வியைப் பயின்று வருகிறார்கள் என்றும் மாநிலத்தின் மக்கள் தொகை விவரங்கள் சுட்டிக்காட்டுகிறது. இந்தக் கொள்கையானது, இளைஞர்களுக்கு, கல்வியை மேம்படுத்துதல், பணியில் அமர்வதற்கான திறன்கள், நல்ல உடல்நலம், உகந்தசூழல் மற்றும் மதிப்பு அடிப்படையிலான வாழ்க்கையை வழங்கக் கருதுகிறது.

இது, நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வது தொடர்பான அவர்களின் அறிவு, அணுகுமுறை, திறன்கள் மற்றும் பயிற்சினை அதிகரிக்க உதவுகிறது.

- இந்த உலகில் மதிப்புமிக்க அறிவுசார் சொத்தாக தமிழ்நாட்டின் ஒவ்வொரு இளைஞனும் உயர வேண்டும்.

மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் 2023–ன் விரிவான குறிக்கோள்களை, குறிப்பாக கீழ்க்கண்ட 5 தொலைநோக்கு கருப்பொருட்களைக் கடைபிடிக்கும்:

1) அடுத்த 7 வருடங்களில், உலகளவில் உயர் வருமானத்தைக் கொண்ட நாடுகளுக்கு நிகராக, தனிநபர் வருமானத்தில் 3 மடங்கு வளர்ச்சியினை அடைந்து, 2023 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் பொருளாதாரத்தில் வளமிக்க மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கும்.
2) தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி முறையை வெளிப்படுத்தும் – இலாபகரமான மற்றும் பயனுள்ள வேலைகளைக் தேடும் அனைவருக்கும், வாய்ப்புகளை வழங்கி, வறுமையில்லா மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து, பாதிக்கப்பட்டவர்கள், நலிவுற்ற பிரிவினர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு பராமரிப்பு அளிக்கும்.
3) சமுதாய மேம்பாட்டில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக விளங்கி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே மனித மேம்பாட்டு குறியீட்டில் உயரிய இடத்தைப் பெறும்.
4) தமிழ்நாடு, பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் உயர் மனித திறமையின் மூலம் புதுமை மையமாகவும் அறிவாற்றலில் இந்தியாவின் தலைநகரமாகவும் விளங்கும்.
5) தமிழ்நாடு, அதனுடைய சூழலியல் மற்றும் அதனுடைய பாரம்பரியத்தை என்றென்றும் பாதுகாக்கும்.

## 4. தொலைநோக்கு

வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சரிசமம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதன் மூலம் ஒருமித்த வளர்ச்சியை நோக்கிய முயற்சியில் உயரங்களை எட்டுவதற்கான இளைஞரின் கனவுகளை நனவாக்கிடவும், தன்னிலை உணர உதவி செய்து, ஊக்குவித்து, முன்னேற்றம், வளர்ச்சி மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்க, பொறுப்புள்ள மற்றும் பங்கு வகிக்கும் குடிமகனாக ஒவ்வொரு தகுதிவாய்ந்த இளைஞனையும் மேம்படுத்தி, மாநிலத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதே இக்கொள்கையின் நோக்கமாகும்.

## 5. குறிக்கோள்

கல்வி, திறன் மேம்பாடு, பண்புடன் கூடிய அறிவு மற்றும் முதன்மை நிலையுடன் கூடிய ஆக்கத்திறன் ஆகியவற்றில் திறன் கட்டமைப்பை மாநிலத்தின் இளைஞர்களிடையே உருவாக்க உதவுதல்.

## 6. நோக்கம்

- இளைஞர்களின் உடல், மனம், உணர்வு, ஆன்மீகம், சமூக–பண்பாடு, அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்களை நோக்கிய விரிவான ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்குதல்
- வாழ்க்கைத்திறன் மேம்பாட்டிற்கான போதுமான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- இளைஞர்களிடையே குடும்பம், சமூகம் மற்றும் நல்லொழுக்க பண்புகளின் முக்கியத்துவத்தை படிப்படியாக புகட்டுதல்
- உயர்வான தொழில் மற்றும் வாழ்வாதாரங்களுக்காக பணி நெறியாக்கம் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்
- வேலை பெறுவதற்கான திறன்களை அடைவதற்கான வழிகளை எளிதாக்குதல்
- சொந்தமாக நிறுவனங்களை அமைக்க இளைஞர்களிடையே தொழில் முனைவோருக்கான உணர்வினை மேம்படுத்தி பயிற்சி அளித்து கைதூக்கி விடுதல்.
- வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கு இளைஞர்களுக்கு உத்வேகம் அளித்தல்.

- ஆரோக்கியமான உடல்நலம் மற்றும் மனநலத்துடன் கூடிய சரிவிகித வாழ்க்கை முறையை நோக்கிய விருப்பத்தை ஏற்படுத்துதல்.
- பாலின நீதி, சமத்துவம் மற்றும் சமபங்கினை இளைஞர்களிடையே உணர்த்துதல்.
- இளைஞர்களை உணரவைத்து பங்கேற்கச் செய்வதன் மூலம் சுற்றுச்சூழலியல் நிலைத்தன்மைக்கு ஆதரவளித்தல்
- உள்ளாட்சியில் இளைஞர்களின் திறன்வாய்ந்த பங்கேற்பை ஆதரித்தல்.
- சமூக நலனில் இளைஞர்களின் பங்களிப்பை உருவாக்குதல்

## 7. இளைஞர்கள் என்பதன் வரையறை

13–35 வயது பிரிவினரை இளைஞர்கள் என 2003–ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் கொள்கை குறிப்பிடுகிறது. 15–29 வயது பிரிவினரை இளைஞர்கள் என 2014ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் கொள்கை பரிந்துரைக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை (UNO) இளைஞர்கள் என்பவர்கள் 15–24 வயதுடையவர்கள் என வரையறுக்கிறது. 16–24 வயது பிரிவினரை இளைஞர்கள் என காமன்வெல்த் நாடுகள் வகைப்படுத்துகிறது. 15–35 வயது பிரிவினரை இளைஞர்கள் என தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை வரையறுக்கிறது. மேலும், இவர்கள் 3 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளார்கள்: 15–21, 22–28, மற்றும் 29–35 வயது.

## 8. வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள்

தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை பின்வரும் வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகளால் வழிநடத்தப்படுகிறது:

**நெறிமுறைகள்**

- **உள்ளடக்கும் தன்மை**

  பல்வகையான தளங்களிலிருந்து வரும் இளைஞர்கள், பயன்பாட்டிலுள்ள வளஆதாரங்கள், சேவைகள் மற்றும் வாய்ப்புகளை எளிய சமமான முறையில் அணுக வழி செய்தல்.

- **பொறுப்புடைமை**

  அனைத்து இளைஞர் மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் பொறுப்புடைமையை ஏற்படுத்துதல்.

- **வாய்ப்பளித்தல்**

  வளஆதாரங்கள், சேவைகள் மற்றும் வாய்ப்புகள் இளைஞர்களுக்கு கிடைக்கும்படி செய்தல்.

- **இருப்புத் தன்மை**

  சுய மற்றும் சமூக மேம்பாட்டிற்காக இளைஞர்களின் ஆற்றலை முழுமையாக பயன்படுத்துவதற்கான வள ஆதாரங்கள், சேவைகள் மற்றும் வாய்ப்புகள் கிடைக்கும்படி செய்தல்.

- **கூட்டிணைவு**

  இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தொடர்புடைய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து பணியாற்றுதல்.

- **அதிகாரமளித்தல்**

  அனைத்து நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள், இளைஞர்களுக்கு அதிகாரமளித்தலை நோக்கி இருக்கும்.

- **ஒருமைப்பாடு**

  இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் அனைத்து முன்னேற்ற திட்டங்களையும் ஒருங்கிணைத்தல்.

- **பங்கேற்பு**

  அனைத்து நிலைகளிலும் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றில் இளைஞர்களின் திறன்மிக்க பங்கேற்பை உறுதி செய்தல்.

- **வெளிப்படைத்தன்மை**

  இளைஞர் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும்.

**மதிப்பீடுகள்**

- **அர்ப்பணிப்பு**

  சுய மற்றும் சமூக மேம்பாட்டில் இளைஞர்களின் அர்ப்பணிப்பை மதிப்பிடுதல்.

- **பரிவு**

  இளைஞர்களின் தேவைகள் மற்றும் சவால்கள் குறித்த பரிவான புரிதல்.

- **பொறுப்புணர்வு**

  அதிக பொறுப்புகளை ஏற்க இளைஞர்களை தயார் செய்தல்.

- **சமத்துவம் மற்றும் சமபங்கு**

  சமவாய்ப்பினை அளித்து இளைஞர்களிடையே சம பங்கினை வளர்த்தல்.

- **நேர்மை**

  இளைஞர்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நேர்மையை அங்கீகரிக்கச் செய்தல்.

- **அன்பு**

  இளைஞர்களிடையே அன்பு மற்றும் சகோதரத்துவ உணர்வை ஏற்படுத்துதல்.

- **அகிம்சை**

  இளைஞர்களிடையே அகிம்சை மனப்பான்மையை ஊக்குவித்தல்.

- **பரஸ்பர மரியாதை**

  நிறம், சாதி, மதம், பாலினம், உடல், மனம் மற்றும் சமூக பொருளாதார நிலைகளைக் கருதாது ஒருவருக்கொருவர் மரியாதை செய்தல்.

- **சேவை**

  இளைஞர்களின் சேவை மற்றும் பங்களிப்பை அங்கீகரித்தல்.

## 9. இலக்கு குழுக்கள்

இந்த கொள்கை, இளைஞர்களால் குறிப்பாக பின்வரும் குழுக்களைச் சேர்ந்தவர்களால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு சவால்களுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- மாணவ இளைஞர்கள் (ஊரகம் மற்றும் நகரம்)
- படிப்பை இடை நிறுத்தம் செய்த இளைஞர்கள் (ஊரகம் மற்றம் நகரம்)
- பட்டியல் பிரிவினர் (ஊரகம் மற்றும் நகரம் ) / பழங்குடி இளைஞர்கள்
- கடலோரப் பகுதிகளில் வாழும் இளைஞர்கள்
- ஆபத்திலுள்ள இளைஞர்கள் (ஊரகம் மற்றும் நகரம்)
- வேலையில்லாத இளைஞர்கள் (ஊரகம் மற்றும் நகரம்)
- தெருவோரக் குழந்தைகள்
- சிறப்புக் குழந்தைகள்
- குற்றம் புரிந்த இளைஞர்கள்
- புலம் பெயர்ந்த இளைஞர்கள்
- மூன்றாம் பாலின இளைஞர்கள்

## 10. முன்னுரிமை குழுக்கள்

இலக்கு குழுக்களின் அனைத்து உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கருதி இருப்பினும், முன்னுரிமைக் குழுக்களின் சமூக பொருளாதார பின்னணி மற்றும் சமவாய்ப்புகள் மறுக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு அதிக கவனம் செலுத்தப்படும். அவைகளாவன:

- இளம் பெண்கள் (பட்டியல் பிரிவினர்/படிங்குடியினர்)
- வேலைவாய்ப்பு பெறும் திறனற்ற இளைஞர்கள்
- குடிசை வாழ் இளைஞர்கள்
- மாற்றுத்திறனாளி இளைஞர்கள்
- ஆபத்தில் உள்ள இளைஞர்கள் (போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஆள்கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்கள், அபாயகரமான மற்றும் பதற்றமான பகுதிகளில் வேலை செய்பவர்கள்)

## 11. உத்தி

கொள்கையின் உத்தியானது, 2017 முதல் 2023 வரையான காலத்தை உள்ளடக்கியுள்ளது மற்றும் இளைஞர் மேம்பாட்டின் ஏனைய பங்குதாரர்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளிடையே ஆக்கபூர்வமான கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பை வழங்குகிறது. அமைதி மற்றும் மேம்பாட்டிற்காக முக்கிய பங்குதாரர்களாகவும், செயல்படுபவர்களாகவும் இளைஞர்கள் உள்ளனர் என்ற அடித்தளத்தின் மீது இது அமைகிறது.


மூன்று பிரிவுகளாக உள்ள இளைஞர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

i. முதல் பிரிவானது 15–21 வயதுடையவர்களைக் கொண்டுள்ளது. இது குழந்தை பருவத்திற்கும் முதிர் பருவத்திற்கும் இடைப்பட்ட நிலையாகும். சுதந்திரம் மற்றும் சுய அடையாளம் குறித்த பிரச்சினைகளை இப்பருவம் கொண்டுவரும். கல்வி, பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய பல்வேறு மாற்றங்களோடு ஒரு சூழ்நிலையிலிருந்து மற்றொரு சூழ்நிலைக்கு மாறுகின்ற பருவமாக உள்ளது.

ii. இரண்டாவது பிரிவில் 22–28 வயதுடையவர்கள் உள்ளனர். இதில் தங்களுடைய கல்வியை முடித்து வேலைவாய்ப்பினை எதிர் நோக்கியுள்ள இளைஞர்கள் அடங்குவர். இந்த பருவம், சார்ந்திருக்கும் தன்மையிலிருந்து விடுபட்டு தன்னிச்சையாக வாழும் மாற்றத்தினையும், மேலும் ஒரு சமுதாயத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஒருவரை ஒருவர் சார்ந்திருத்தலையும் உணரும் பருவமாகும்.

iii. மூன்றாவது பிரிவில் உள்ள 29–35 வயதுடையவர்கள், பெரும்பாலும் நிறைவான வாழ்க்கையுடன், சமூக மற்றும் அரசியல் பொறுப்புணர்வு உடையவர்களாக இருப்பர். மேலும் இந்த பிரிவு, வாழ்வாதார வாய்ப்புகளில் குறைவுள்ளவர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

இந்த உத்தி, கல்வி, கலாச்சாரம், இயற்கை, சமூகம் மற்றும் மனித அறிவியல், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் முழு அளவிலான திறன்களை உள்ளடக்கிய மூன்று பல்வகையான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பணிகளை முன்னிறுத்துகிறது.




**(அ) அறிவு பரவலாக்கம் மற்றும் குடிமை பங்கேற்பை ஏற்படுத்துதல்**

**அ. 1. இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கான ஏற்ற சூழலை உருவாக்குதல்**

மாநில முழுவதிலும் உள்ள இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது அரசுக்கு சவாலானதாகும். அவர்களை ஈடுபடுத்துவதற்கு பல்வேறு நோக்கங்கள் இருப்பதால் பல்வேறு ஈடுபடுத்தும் மாதிரிகள் முன்னிறுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

- அரசு, மாநிலத்தின் அனைத்து இளைஞர்களுக்கும் தகவல்களை வழங்கி, அவர்களின் எண்ண ஓட்டத்தை முறையாக கண்காணித்து ஈடுபடுத்த வேண்டும். இதை, விக்கிப்பீடியா பாணி கருத்துக்களம் மற்றும் ஊடாடும் இணையதளங்கள் மூலமாக பல்வேறு நிலைகளில் இளைஞர் அமைப்புகளை உள்ளடக்குவதன் மூலம் அடையலாம். சுய உதவிகுழுக்கள் (SHG), நேரு யுவ கேந்திரா சங்கதன் (NYKS), நாட்டு நலப்பணித்திட்டம் (NSS), அரசு சாரா நிறுவனங்கள் (NGOS) மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற பங்கு நிறுவனங்களை இளைஞர்களுடன் இணைக்க அரசு தூண்டலாம். இக்குறிக்கோளை அடைய தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.
- அரசு குறிப்பிட்ட கொள்கை விவகாரங்களுக்கான உள்ளீடுகளைப் பெற இளைஞர் பிரதிநிதிப்பிரிவினை ஈடுபடுத்தலாம். இது, தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின்

அடிப்படையிலான மற்றும் இதர வழிகளில் கொள்கை அடிப்படை கருத்தரங்குகள், கொள்கை விளக்கக் குறிப்புகளுக்கான அழைப்புகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் அடையலாம். இவற்றின் அடிப்படையில் இளைஞர்களை ஈடுபடுத்தும் வழிமுறையினை உருவாக்க அரசு, பிரதிநிதித்துவ கல்வி நிறுவனங்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் இதர பங்குதாரர்களை அடையாளம் காணலாம்.

- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, அறிவுப்பூர்வமாக தொடர்பு கொள்ளும் திறன், அதன் நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் திறன் கொண்ட இளைஞர்களின் உட்பிரிவினை அடையாளம் காண வேண்டும். தனித்துவம் மிக்க பிரதிநிதிகளைக் கொண்ட இளைஞர் ஆலோசனைக்குழுவை இத்துறை அமைக்க வேண்டும். இக்குழுவானது, அரசுக்கு முக்கிய கொள்கை விவகாரங்களில் விரிவான உள்ளீடுகளை அரசுக்கு அளித்து இளைஞர்களைத் திரட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி, இளைஞர்களின் வேறுபட்ட பிரிவினரை தொடர்ச்சியாக ஈடுபடுத்தும்.
- அனைத்து பங்குதாரர்களும், 2014 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் கொள்கையில் அடையாளம் காணப்பட்ட இளைஞர் மேம்பாட்டிற்கான முன்னுரிமைகளின் அடிப்படையில் உத்திகளை ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் செயல்திட்டங்களை உருவாக்கி, குறிப்பிட்ட பகுதிகளில் திட்டங்களை வடிவமைத்து, இளைஞர்கள் மீதான அவைகளின் தாக்கத்தை கண்காணித்து மதிப்பீடு செய்யவேண்டும்.

**அ. 2. சமூக விவகாரங்களில் இளைஞர்கள் பங்கேற்பதைத் தூண்டும் பொருட்டு ஆளுகை முறையை உருவாக்குதல்**

- துடிப்பான குடிமக்களின் முக்கியத்துவத்தைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். குடிமைக் கூறு பொருத்தமானதாக இருக்கும் பொருட்டு கல்விப்பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும். அரசு, முகமைகளுடன் ஈடுபடுவதற்கான பல்வேறு வழிகளைக் குறித்த விழிப்புணர்வை இளைஞர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.
- அரசு செலவினங்கள் மற்றும் சமூக நலத்திட்டம் போன்ற இனங்களில் இளைஞர்களின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுச்செலவின ஆவணங்கள் மேலும் வெளிப்படையானதாகவும், அனைத்துத்தரப்பு மக்களால் அணுகக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

- கிராம அளவிலான திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணிக்க, கிராம சபை/மகளிர் சபைக்கூட்டங்களில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். அதிகாரிகள் மற்றும் குடிமக்களுக்கிடையே கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கருத்துக்கேட்பு தளங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஒரு தனிப்பட்ட இளைஞர் கிராம சபை நடத்தப்பட வேண்டும்.

**அ. 3. நகர்ப்புற ஆளுகையில் இளைஞர்கள் ஈடுபடுவதை ஊக்குவித்தல்**

ஊரக ஆளுகை செயல்முறைகளில் குடிமக்களை ஈடுபடுத்துவதற்கான செயல்முறைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. எனினும், அதேபோன்ற கவனிப்பு நகர்ப்புற ஆளுகையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆதரவாக குடிமக்களின் பங்களிப்பு கிடைக்கப்பெறவில்லை. அதிகரித்து வரும் நகரமயமாக்கல் மற்றும் அடையாளமின்மை போன்ற தன்மையைக் கொண்ட நகரவாழ்க்கையில், இளம் இந்தியர்கள் முடிவெடுப்பவர்களுடன் ஈடுபட்டு நகர ஆளுகையில் பங்களிக்கும் வகையில், வழிகள் மற்றும் செயல் முறைகளை உருவாக்கி பாலமாக விளங்குவது அரசுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

**ஆ. முக்கிய பகுதிகளில் செயலாக்கம்**

**ஆ. 1. ஒற்றுமை மற்றும் சமத்துவ உணர்வை ஆழப்பதியச் செய்வதற்கான மதிப்புகள் மற்றும் கலாச்சாரத்தை வளர்த்தல்**

நமது மாநிலம் உயர்ந்த கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதுடன் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் வாழும் மக்களுக்கு வளமையை வழங்கும் காரணிகளாக குடும்ப மதிப்புகளும் சமுதாய ஒற்றுமையும் திகழ்கிறது. இருப்பினும், மதிப்புகள் மற்றும் கலாச்சாரத்தை மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு முறையாக மாற்றுவதன் தேவையை தற்போதைய சமூக பொருளாதார மாற்றங்கள் நியாயப்படுத்துகின்றன. உலகமயமாக்கல், தொழில்மயமாக்கல், தகவல் பெருக்கம் மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இளைஞர்கள் எழுச்சி பெற உறுதுணை புரிந்தாலும் தமிழ் பாரம்பரியத்தின் அடிப்படை மதிப்புகள் மற்றும்

கலாச்சாரத்தை பாதுகாத்து நிலைப்படுத்துவது, தொடர்புடைய அனைவருக்கும் முதன்மையான கடமையாகும். திருமண அமைப்பு மீதான அச்சுறுத்தல், பெரியவர்களைப் பராமரிப்பதில் அலட்சியம், ஆரோக்கிய வாழ்வை அச்சுறுத்தும் மகிழ்ச்சியைத் தேடும் வாழ்க்கை முறை போன்றவை நாட்டின் மற்றும் மாநிலத்தின் மதிப்புகளையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து நிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவசியமாக்குகிறது.

**கொள்கைத் தலையீடுகள்**

- கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் வாயிலாக இளைஞர்களுக்கிடையே சமுதாய மற்றும் நன்னெறி மதிப்புகளைக் கற்பித்து நிலைநிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்
- வளரும் இளைய கலைஞர்கள் தங்களின் திறமைகளை மாவட்ட, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெளிப்படுத்துவதற்கு ஆதரவு வழங்கப்படும்
- சமய மற்றும் மொழி வேற்றுமையைகளைக் கடந்து, நல்லிணக்கம் மற்றும் பொதுவான சகோதரத்துவ உணர்வை இளைஞர்களிடையே வளர்த்தல்; பெண்களின் மரியாதையை குலைக்கும் நடவடிக்கைகளை துறத்தல்
- தமிழ் கலாச்சாரத்தை நிலைநிறுத்துவதற்காக, பொருத்தமற்ற, இழிவுபடுத்தக்கூடிய ஊடக ஆதிக்கத்தை எச்சரிக்கையாகவும் கவனமாகவும் ஆராய வேண்டியதை உணரவைப்பதன் மூலம் நமது தமிழ் கலாச்சாரத்தின் உயர்ந்த பாரம்பரியத்தை மதித்து பாதுகாக்கும் நடைமுறையை உருவாக்குதல்


**ஆ. 2. முறையான கல்வி அதிகபட்சமாக கிடைக்க வசதி செய்தல் மற்றும் முறைசாரா, வாழ்நாள் முழுவதும் கற்கும் கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல்**

நகர்ப்புற பகுதிகளில், கல்விக்கான (முறையான மற்றும் தொழிற்கல்வி) வாய்ப்புகள் அதிக அளவில் கிடைக்கப் பெறும் நிலையில் கிராம மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளில் மேம்பாடு தேவைப்படுகிறது. முறையான கல்வியில், சமீபத்திய போக்கானது, திறன் மற்றும் நடத்தையைக் காட்டிலும், கல்வி சார்ந்த கற்றலுக்கே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தனிபோதனை மையங்கள் (Tuition Centres), தனி பயிற்சி மையங்கள் (Tutorials) மற்றும் உறைவிடப்பள்ளிகள் அதிக அளவில் பெருகினாலும்

திறன்மேம்பாடு, தொழிற்கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்புகளுக்கு நிகராகாது. வாழ்க்கைத் திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான திறன்கள் பின்னோக்கி தள்ளப்பட்டுள்ளன. எழுத்தறிவு மற்றும் கல்வி தொடர்பானவற்றில் நாட்டில், தமிழ்நாடு முதன்மையான இடத்தை வகிக்க போட்டியிடும் நிலையில், ஆண் மற்றும் பெண், நகரம் மற்றும் கிராமப்புறத்தினர், சலுகை பெற்றவர் மற்றும் குறைந்த சலுகையுடையவர் என அனைத்து தரப்பிலான இளைஞர்களும் முழுமையான கல்வியைப் பெறுவதை உறுதி செய்திட வேண்டும்.

**கொள்கைத் தலையீடுகள்**

- மேல்நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தை மேம்படுத்துதல்
- இளைஞர் மக்கள் தொகையின் உதவியுடன் கல்வி பெறும் உரிமை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல்
- பள்ளி செல்லாத இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களை கல்வி நிலையங்களில் சேர்த்தல் அல்லது திறன் மேம்பாட்டிற்கு வழிவகுத்தல்
- இளைஞர்களுக்கு தொழில்முறையான கலந்தாய்வு மற்றும் தொழில் வழிகாட்டுதல்களை அளித்தல்
- உணர்ச்சிகரமான ஆற்றலைச் செயல்படுத்த ஒத்தவயதினருக்கான கலந்தாய்வை பயன்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த சுய கட்டுப்பாட்டு உணர்வையும் தனிநபர் நடவடிக்கைகான பொறுப்புணர்வையும் உருவாக்குதல்
- அறிவியல் சார்ந்த மனநிலையையும் ஆராய்ச்சியையும் இளைஞர்களுக்கிடையே வளர்ப்பதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்
- மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதை ஊக்குவிப்பதற்காக புதுமை நிதியை நிறுவுதல்
- கல்வியின் ஒவ்வொரு நிலையிலும், தொழிற்கல்வியை வேலைவாய்ப்பு திறன்களுடன் இணைத்து வழங்குவதன் மூலம் கல்வியின் எந்த முடிவு நிலையிலும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுபவர்களாக இருத்தல்




**ஆ. 3. பயிற்சி அளித்தல் மற்றும் அதிகமான வழிகளை ஏற்படுத்துவதன் வாயிலாக, வேலைவாய்ப்பிற்கான மனப்பான்மை மற்றும் திறன்களை மேம்படுத்துதல்**

விரைவான நகரமயமாதலில், நாட்டில் உள்ள முன்னணி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இது, நகரப்பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு வரமாக இருக்கும் வேளையில், நகரப்பகுதிகளில் பரவலாக பாதுகாப்பற்ற இடம் பெயர்தலுக்கும், கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பின்மைக்கும் வழிவகுக்கிறது. தமிழ்நாட்டின் கடற்கரைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் இதே போன்ற சூழல் உள்ளது. வேலைவாய்ப்பின்மையுடன் கூட, திறமைக்குத் தகுந்த வேலைவாய்ப்பின்மையும் பெரிய அளவிலான பிரச்சினையாகும். இது பொருளாதார பிரச்சினைகளை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், சமூக பிரச்சினைகளையும் உண்டாக்குகிறது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திறன்களை பெற்றுள்ளவர்களுக்கும் அத்தகைய அறிவினைப் பெறாதவர்களுக்குமிடையே உள்ள பிளவிற்கு தீர்வு காணப்பட வேண்டும். உயர்கல்வியானது, அறிவைப் பெறுவதற்கான கதவுகளைத் திறக்கின்ற அதே வேளையில், தொழில் முனைவோர் அல்லது சுயவேலைவாய்ப்பிற்கான வாய்ப்பினை கட்டுப்படுத்துகிறது. பெரும்பாலான இளைஞர்கள் அரசுப்பணிகள் மற்றும் மாதாந்திர ஊதிய பணிகளைப் பெறவே எதிர்பார்க்கின்றனர். சேவைத் துறை மற்றும் சுய வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்துள்ள வாய்ப்புகளுக்கு, வேலைவாய்ப்பு சார் திறன்கள் மற்றும் அத்தகைய வாய்ப்புகளை முன்னோக்கி எடுத்துச் செல்லும் நேர்மறை மனப்பான்மையுடைய இளைஞர்களே தேவைப்படுகின்றனர்.

நாகரிகமான வேலைவாய்ப்பினை பெறவும், மாறி வருகின்ற உலகச் சந்தையில் இந்தியாவின் போட்டித் தன்மையை உறுதி செய்யவும், தேவையான மற்றும் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்ட திறன்கள், அறிவு மற்றும் பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்ற பணியாளர்களை உருவாக்குதல் திறன் மேம்பாட்டின் நோக்கம் ஆகும். முறைசார்ந்த மற்றும் முறைசாராத் துறைகளில், உற்பத்தித் திறன் மற்றும் பணியாளர்களின் வேலைவாய்ப்பினை (கூலித் தொழிலாளி மற்றும் சுய வேலைவாய்ப்பு) அதிகரிப்பதும் இதன் குறிக்கோளாகும். தற்போதைய அமைப்பானது புதுமை, முதலீடு, தொழில் நிறுவனம், பொருளாதார பன்முகத்தன்மை ஆகியவற்றின் மேம்படுத்தப்பட்ட திறனை பெற்றிருக்கும் வகையிலும் மாறிவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழிலாளர் சந்தை தேவைகளை ஏற்றுக் கொள்ளும் வகையிலும் இளைஞர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஏனைய பின்தங்கிய பிரிவினர்களின் அதிகமான பங்கேற்பு மற்றும் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சியைக் கோருகிறது.

மாநிலத்தில் வேலைவாய்ப்பின்மையைப் போக்குவதற்கு, மாநிலத்தின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள், சம்மந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் ஏனைய தனியார் முகமைகளுடன் ஒருங்கிணைந்து, பின்வரும் துறைகள் மீது கவனம் செலுத்தும்:

i. வேளாண்மை
ii. ஆட்டோமொபைல் தொழிற்சாலை
iii. அழகு மற்றும் உடல்நலம்
iv. கட்டுமானம்
v. மின்னணு
vi. இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் தயாரித்தல்
vii. சுகாதாரம்
viii. குழாய் அமைப்பு
ix. தகவல் தொழில்நுட்பம்
x. தோல்
xi. ஊடகம் மற்றும் கேளிக்கை
xii. இரப்பர்
xiii. பாதுகாப்பு சேவைகள்
xiv. தொலைத்தொடர்பு

இளைஞர், அவரது / அவளது கல்விப் பின்னணி அல்லது விருப்பத்திற்கேற்ப திறன் துறையைத் தேர்ந்தெடுக்கலாம். இது இளைஞர்களை அவர்களது தொழிலில் சிறப்பை எட்டவும், போட்டி வேலைச் சந்தையில், இன்றியமையாத உந்துதலைப் பெறவும் உதவுகிறது.

**கொள்கைத் தலையீடுகள்**

- ஒருவரின் போதாமை குறித்த கட்டுக்கதைகள் மற்றும் தவறான எண்ணங்களைப் போக்கவும், தற்சார்பு பெறவும், இளம் வயதினர் சுயவேலைவாய்ப்பு குறித்த நேர்மறை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள அவர்களை ஊக்குவித்தல்
- தொழில்முனைதல் மற்றும் திறன் மேம்பாட்டிலுள்ள பயிற்சியின் செயல்திறமிக்க பகுதிகளைக் கண்டறிந்து, அத்தகைய திட்டங்களை வடிவமைத்தல்
- இளைஞர்களுக்கு பலன்சார் மென்திறன்கள் மற்றும் வாழ்க்கைத் திறன்களுக்கானப் பயிற்சிகள் அளிப்பதன் மூலம், முழுமையான ஆளுமை மேம்பாட்டிற்கு உதவுதல்
- நடைமுறையிலுள்ள திட்டங்களுடன் தொடரமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் சுயவேலை வாய்ப்பு மற்றும் ஏனைய வேலை வாய்ப்பு சார்ந்த தொடக்க முயற்சிகளுக்காக அவர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்
- தொழில்முனைதல் உணர்வை ஊக்குவிக்க கடன்களுக்கு விரைவாக ஒப்புதல் வழங்க வசதி செய்தல்
- கட்டணமில்லா குடிமைப் பணி பயிற்சித் திட்டங்கள் மற்றும் அயல்நாடு வேலைவாய்ப்பை பெறுவதற்காக, அயல்நாடு மனித வள கழகம் குறித்த விழிப்புணர்வை உண்டாக்குதல்
- இளைஞர்களிடையே பாரம்பரிய கலைகளை பயிற்சி செய்யவும் நிலைக்கச் செய்யவும் ஊக்குவித்தல்
- கிராம அளவில் உற்பத்தி அலகுகளை வெளிமுகமைப்படுத்துதல் மற்றும் தொழிற்சாலைகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருத்தல் மூலம் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் அதன்சார் தொழிற்சாலைகளில் கிராமப்புற வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம் பாதுகாப்பற்ற இடம்பெயர்தலைத் தடுத்தல்
- கடற்கரைப் பகுதிகளில் வசிக்கின்ற இளைஞர்களுக்காக சிறந்த வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துதல்

## ஆ. 4. முழுமையான நல்வாழ்விற்காக, இளைஞர்களிடையே ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல்

மாறிவரும் உணவு பழக்கத்துடன் கூடிய வேகமான வாழ்க்கை முறையானது, இளைஞர்களின் ஒட்டுமொத்த நலனுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இரத்த சோகையைத் தடுக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நகரப் பகுதிகளில் உள்ள கணிசமான அளவிலான இளைஞர்களும் கிராமப் பகுதிகளில் உள்ள இளைஞர்களும், குறைந்த கலோரி அளவுடைய துரித உணவுகளின் அபாயங்களுக்கு ஆட்பட்டுள்ளனர். அதிக நேரம் தொலைக்காட்சியினைக் காணுதல் மற்றும் போதுமான உடல் செயல்பாடின்மை ஆகியவை உடல் உழைப்பு இல்லாத வாழ்க்கை முறைக்கு வழிவகுப்பதால், புதிய வாழ்க்கை முறை நோய்களுக்கு வளர்ப்பிடமாக விளங்குகின்றது. போதைப் பொருளை நோக்கி செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் நிலவுகின்ற போட்டி, மன அழுத்தம் மற்றும் உணர்ச்சி ஏற்றத்தாழ்வை உண்டாக்குவதை சுட்டிக்காட்டுகிறது. பெற்றோர் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகள், வாழ்க்கைத் தேவைகள் மற்றும் நபர்களுக்கிடையேயான உரசல் ஆகியவற்றினை இளைஞர்கள் அனுபவிக்கையில் அதிக அளவிலான மன அழுத்தம் ஏற்படுவதனால், அவர்களிடையே தற்கொலை முயற்சிகளின் போக்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. "ஆரோக்கியமான உடலே ஆரோக்கியமான மனம்" என்ற கருத்திற்கேற்ப இளைஞர்கள் பொருளாதார வளம் மற்றும் சமூக நலனை குறிக்கோளாக கொண்டிருப்பதால், உடல், மனம் மற்றும் அவர்களின் உணர்வு ஆகியவற்றைப் பேணி வளர்த்திட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பெரிய தேவை உள்ளது.

**கொள்கைத் தலையீடுகள்**

- இளமைக் காலத்தினைப் பாதுகாப்பாக இளைஞர்கள் கடந்து செல்வதற்கு ஏதுவாக ஆரோக்கியமான உடல், மனம் மற்றும் உணர்வு ஆகியவற்றின் அவசியத்தை இளைஞர்கள் புரிந்து கொள்ள ஏதுவாக சுகாதார விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்

- இளைஞர்களுக்கிடையே சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு உதவிபுரியும் வண்ணம் மாநிலத்தில் சுகாதார அமைப்பின் திறனை மேம்படுத்துதல்
- முன்னேற்றம், தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வு ஆகியவை உள்ளடக்கிய சுகாதார பராமரிப்பிற்கு வழிவகை செய்தல்
- இனப்பெருக்கம் சார்ந்த உடல்நலத்தில் இளைஞர்களின் சுகாதார பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்
- பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான நடத்தை, முறையான உணவு பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஆகியவற்றினை இளைஞர்களுக்கிடையே மேம்படுத்துதல்
- இளைஞர்களிடையே மன நலம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் ஆலோசனை வழங்கும் சேவைகளின் மூலம் அவர்களுடைய உளவியல் சமூக பிரச்சினைகளில் முன்னதாகவே தலையிட அவர்களைத் தயார்படுத்துதல்
- மாநிலத்தில் யோகாவை மதமாக அல்லாமல், ஒரு நடைமுறை உதவியாக ஏற்படுத்துதல். அது, உடல், மனம் மற்றும் உணர்வின் நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட பழமையான கலையாகும். தொடர்ச்சியான யோகப் பயிற்சியானது இளைஞர்களை அமைதி உணர்வு, நல்வாழ்வு மற்றும் சுற்றுச்சூழலுடன் ஒன்றிணைந்த உணர்வு ஆகியவற்றிற்கு வழி நடத்தும்.

**ஆ. 5. உள்கட்டமைப்பை ஏற்படுத்தி வலுப்படுத்துவதன் மூலம், சுற்றுப்புறத்தில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளில் இளைஞர்கள் ஈடுபடுவதை ஊக்கப்படுத்துதல்**

விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் இளைஞர்களின் ஒட்டு மொத்த மேம்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகிறது. தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துவதில் பெருமித உணர்வை அடைவது மட்டுமல்லாமல், அதிலிருந்து ஒரு கண்ணியமான வாழ்வினை உருவாக்க கூடிய வாய்ப்பினைப் பெறும் ஒரு இலாபகரமான தொழிலாக விளையாட்டுத் துறை உருவாகி வருகிறது. கடந்த காலத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு விளையாட்டாக கிரிக்கெட் இருந்த போதிலும், விளையாட்டைத் தொழிலாக தேர்ந்தெடுக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், பல்வேறு தடகள மற்றும்

கள விளையாட்டுகள் மற்றும் ஏனைய விளையாட்டுகள் உத்வேகம் பெறுகின்றன. பள்ளி மாணவர்கள், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளிக்கிறது. தேசிய அளவில் உயர்ந்த இடங்களை அடைவதில் தமிழ்நாட்டு தடகள வீரர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டிருக்கையில், கட்டமைப்பான அணுகுமுறையின் மூலம் இந்த நிலையினை மேம்படுத்தி நிலைப்படுத்துவது அரசின் பொறுப்பாகிறது.

ஒரு சிலருக்கு விளையாட்டு வாழ்க்கைத் தொழிலாக மாறிவரும் நிலையில், மாநிலத்தின் ஒவ்வொரு இளைஞரும் பொழுதுபோக்குக்காகவும் உடற்பயிற்சிக்காகவும் விளையாட்டுகளில் ஈடுபடுவது அவசியமாகும். விளையாட்டுக்களை விளையாடுவது மற்றும் உடற்பயிற்சிகள், யோகா, பிரணாயாமம், உடல் மற்றும் மனதை ஈடுபடுத்தும் ஏனைய உடற்பயிற்சிகள் இளைஞர்களை நல்ல உடல்நலனுடன் வைத்து அவர்களை ஆற்றல் மிக்க உற்பத்தி திறன் உடையவர்களாக்கும். இந்த கண்ணோட்டத்தில் உத்வேகத்தை புதுப்பித்து வேகப்படுத்த, போதுமான உள்கட்டமைப்பு, பயிற்சி பெற்ற நபர்கள், கையேடுகள், உபகரணங்கள் மற்றும் நிதி உதவி ஆகியவற்றின் தேவை உள்ளது.

**கொள்கைத் தலையீடுகள்**

- தமிழ்நாட்டின் இளைஞர்களிடையே விளையாட்டுக்கள் மற்றும் அன்றாட உடற்தகுதி செயல்பாடுகளை ஊக்குவித்தல்
- விளையாட்டுக் கட்டமைப்புகள் மற்றும் உபகரணங்களில் இருக்கக் கூடிய ஆதாரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் புதிய ஆதாரங்களை ஏற்படுத்துதல்
- தொடக்க நிலையிலேயே திறமை வாய்ந்த இளைஞர்களை அடையாளம் கண்டறிதல் மற்றும் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெறுதலை ஊக்கப்படுத்துதல்
- ஊரக விளையாட்டுகளுக்கான திட்டங்கள் மற்றும் வசதிகள் பற்றி உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இளைஞர் மன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு காலமுறை பயிற்சி அளித்தல்
- விளையாட்டுக்களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் மன்றங்கள்

**ஆ. 6. மனித உரிமைகள், பாலின சமத்துவம் மற்றும் சமன்பாடு ஆகியவை குறித்து இளைஞர்களுக்கு உணர்வூட்டல்**

தொன்மையான இலக்கியத்தில் ஆழ்ந்த கருத்தாக்கமாக உள்ள பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படை கோட்பாடாகும். இருப்பினும், அது நடைமுறைக்கு வருகையில், ஒருவருடைய சமூகப் பொருளாதார நிலையினை தீர்மானிக்கக் கூடிய கல்வி மற்றும் வேலைகளில் சிறந்த வாய்ப்புகள் ஆண் உறுப்பினர்களுக்கே உள்ளது. குடும்பம் மற்றும் சமூக அளவில் முடிவு எடுப்பதில் தற்போதும் ஆண் உறுப்பினர்களின் ஆதிக்கமே மேலோங்கி உள்ளது. இளைஞர்கள் சமூகத்தின் நுட்பமான பகுதியாக உள்ளதால் அத்தகைய பாகுபாடு அவர்களிடமும் கூட வியாபித்துள்ளது. எனினும், சுயஉதவிக் குழுக்களின் எழுச்சி மற்றும் உள்ளாட்சி சுயநிருவாகத்தில் பங்கேற்பு ஆகியவற்றுடன் சமீப காலங்களில் சூழ்நிலை விரைவாக மாறி வருவதால், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சாதகங்களை நோக்கி பெண்களை முன்நடத்திச் செல்கிறது.

பாலின சமத்துவம் மற்றும் சமன்பாடு, பெண்கள் ஆண்களுக்கு எதிராக தங்களுடைய உரிமைகளுக்காக போராடும் முயற்சியாக பார்க்கப்படாமல், மனித கௌரவத்தை மீட்டெடுப்பதற்காக இரு பிரிவினரின் ஒருங்கிணைந்த முயற்சியாக பார்க்கப்படுகிறது. இந்த சமத்துவம் மற்றும் சமன்பாடு குறித்த உணர்வு இளைஞர்களின் மனதில் புகுத்தப்பட்டு இந்த கொள்கையை முன்னெடுத்துச் செல்ல அவர்கள் உணர்வூட்டப்பட வேண்டும். இது, பெண் குழந்தைகளின் அதிக இறப்பு விகிதம், கருவிலேயே பெண் சிசுவை அழிக்கும் பழக்கம், பெண் குழந்தைகளுக்கு கல்வியை மறுத்தல், அவர்களுடைய ஊட்டச்சத்துத் தேவைகளை மறுத்தல் மற்றும் அவர்களுடைய வேலை வாய்ப்பினை கட்டுப்படுத்துதல், பாலியல் கொடுமை மற்றும் குடும்பத்திற்குள்ளேயும், வெளியேயும் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்.

**கொள்கைத் தலையீடுகள்**

- மனித உரிமைகள் மற்றும் பாலின சமத்துவம் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

- பாலின நீதியை உறுதிப்படுத்துவதில் குடும்பங்கள், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஆளுகை நிறுவனங்களை பங்கேற்கச் செய்தல்
- குடும்ப அமைப்பிற்கு உள்ளேயும் வெளியேயும் தலைமைப் பொறுப்பேற்பதற்கு இளம் பெண்களை ஊக்கப்படுத்துதல்
- குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை, கற்பழிப்பு, வரதட்சணை மற்றும் கடத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு செய்யும் அமைப்பு மற்றும் முறைகள் வழியாக இளம் பெண்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்தல்
- பின்தங்கிய சமுதாயம் மற்றும் பிரிவைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர் ஆகியோர் இளைஞர் மேம்பாட்டிற்கான திட்டங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்
- கல்வி நிறுவனங்கள், விளையாட்டு வசதிகள், பணியிடங்கள், போக்குவரத்து முறைகள் மற்றும் அனைத்து பொது இடங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் ஏற்படுத்துவதை உறுதிசெய்தல்.

**ஆ. 7. உள்ளாட்சி மற்றும் உள்ளூர் சமுதாய தேவைகளை நிருவகிப்பதில் இளைஞர்களை பங்கேற்க ஊக்குவித்தல்**

பொதுவாக ஆசிய சமூகத்தில், குறிப்பாக இந்திய சமூகத்தில், தலைமைத்துவம் மற்றும் முடிவெடுத்தலில், பெரியவர்களின் பங்கிற்கு அதிகளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால், சமூக பிரச்சினைகளை தீர்வு செய்தல், தலைமைத்துவத்தை ஏற்றல் மற்றும் அரசியலில் ஈடுபடுதல் ஆகியவற்றில் இளைஞர்களின் பங்கேற்பு குறைந்துள்ளது. புள்ளி விவரத்திலும், உற்பத்தித் திறனிலும் பெரிய சக்தியாக இளைஞர்கள் உருவெடுப்பதால், சமூக மேம்பாட்டில் இளைஞர்களை ஈடுபடச் செய்யும் நேர்மறை நோக்கினை வளர்க்கும் அமைப்பு மற்றும் வழிமுறைகளை அரசு உருவாக்குகிறது.

இலட்சிய உணர்வு, சுயநலமற்ற போக்கு மற்றும் தொண்டுள்ளம் ஆகியவற்றை இளைஞர்கள் தங்களுக்குள்ளே பெற்றுள்ளனர். சமுதாயத்தின் நலனுக்காக இவை பயன்படுத்தப்பட வேண்டும். நாட்டில் நடைபெறும் தற்போதைய சமூக கொந்தளிப்புகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்த சமூக ஊடகங்களை பரவலாக பயன்படுத்துவது, சமூக பிரச்சினைகளை இளைஞர்கள்

கையாளுவதில் அவர்களின் உத்வேகத்தை ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய போக்கை அரசு மற்றும் சமூகம் ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்த வேண்டும்.

**கொள்கைத் தலையீடுகள்**

- உள்ளாட்சி அமைப்பு முறைகளில் பங்கேற்கும் தேவை குறித்து விழிப்புணர்வை இளைஞர்களிடையே உருவாக்குதல்
- குடியரசு செயல்முறையில் இளைஞர்கள் செயல்திறனுடன் ஈடுபடுவதற்கு உதவுதல்
- உள்ளூர் சமுதாய தேவைகளைக் கண்டறிய, முன்னிலைப்படுத்த மற்றும் தீர்வு காண இளைஞர்களை ஊக்குவித்தல்
- ஆட்சி முறை குறித்து இளைஞர்கள் உணருவதற்கு கல்வி நிறுவனங்களில் இளைஞர் பாராளுமன்றத்தை அறிமுகம் செய்தல்

## ஆ. 8. சுற்றுச் சூழல் / பாராம்பரியத்தை பாதுகாப்பது தொடர்பான பிரச்சினைகளில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்

நீர் மற்றும் ஆற்றல் போன்ற குறைந்து வரும் வள ஆதாரங்களைப் பாதுகாப்பதில் இளைஞர்களின் பங்கு உலகளவில் உத்வேகம் அடைந்துள்ளது. நாடு முழுவதிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீடித்த தன்மை ஆகியவை மேம்பாட்டு முயற்சிகளின் முக்கிய பங்காக உள்ளன. உலகளாவிய மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு இணையாக, இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டை உறுதிசெய்வதில் மாநில அரசு முனைப்புடன் உள்ளது. தொழில்மயமாதல் மற்றும் காற்று மாசுபாடு ஆகியவற்றினால் பசுமை இல்ல விளைவு மற்றும் உலக வெப்பமயமாதல் ஏற்படுகின்றன. இந்த நெருக்கடியை சமாளிப்பதில் இளைஞர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நீடித்த வேளாண்மை, நீடித்த பயன்பாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சி இளைஞர்களால் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும்.

**கொள்கைத் தலையீடுகள்**

- மாசுபாடு மேலாண்மை மற்றும் நீடித்த வளர்ச்சி குறித்து இளைஞர்களை உணரச் செய்தல்

- நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் தங்களது வாழிடத்திலுள்ள இயற்கை நீர் வளங்களைப் பாதுகாப்பதில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்
- மரங்களை வளர்ப்பதிலும், சுகாதாரத்திலும் இளைஞர்களின் பங்கினை அதிகரித்தல்
- கழிவு மேலாண்மை, இயற்கை வேளாண்மை போன்ற நிலையான வேளாண்மைச் செயல்முறைகளைப் பின்பற்ற இளைஞர்களை ஊக்குவித்தல்
- நிலையான வேளாண்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்றவை உள்ளிட்ட நீடித்த வளர்ச்சியை மேம்படுத்தும் தொழில்களை அமைக்க இளைஞர்களை ஊக்குவித்தல்
- மாநில மற்றும் இந்திய வரலாறு, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்த சரியான அறிவு மற்றும் வெளிப்பாட்டினை ஏற்படுத்துதல்.

## ஆ.9. உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம்

தமிழ்நாட்டை ஒரு அறிவுசார் மையமாக மாற்றும் வகையில், ஆராய்ச்சி சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குதலை நோக்கி, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வியை இக்கொள்கை ஊக்குவிக்கும். மாநிலத்தின் **550**–க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகளைக் கொண்டு, அறிவு சார்ந்த சமூகத்தை உருவாக்கும் வகையில் தொழில்சார் திறன்களை எழுச்சி அடையச் செய்வதை இளைஞர் கொள்கை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

உலகமயமாக்கல், பொருளாதார மற்றும் சமூக செயல்முறைகளில் அதிகமான ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. இது, அறிவு மற்றும் தகவல் தொடர்புகளில் மேம்பட்ட அணுகுமுறைக்கான புதிய வாய்ப்புகளை இளைஞர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. உலகமயமாக்கலால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மற்றும் வாய்ப்புகளைக் கற்கவும், பயன்படுத்தவும் புரிந்து கொள்ளவுமான மேடை அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சியானது, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்து விளங்குதலுக்கான புதிய பாதைகளைத் திறந்திருக்கிறது. அறிவுசார் பொருளாதாரத்தில் நுழைவதற்கான கடவுச்சீட்டாக இணையம் அதிகமாக உருவாகி வருகிறது. தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைக்கான புதிய பொருளாதார முறைக்கு அறிவுசார்ந்த தொழில் முறையை உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவை வலுவாக்கியுள்ளது.

இன்றைய இளைஞர்கள், முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் வெளி உலகோடு தொடர்பிலும் இணைந்தும் இருக்கின்றனர். வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை அவர்கள் விரைவில் கற்று கொள்கின்றனர். அதிர்ஷ்டவசமாக, இளைஞர்கள் தங்களுக்கு முன் எதிர்ப்படும் சவால்களை, புதிய கண்ணோட்டத்துடன் நோக்கி உற்சாகத்துடனும் கற்பனை வளத்துடனும் எதிர்கொள்ளுகின்றனர். இளைஞர்கள், தங்கள் சமூகங்களின் சமூக மற்றும் பொருளாதார செல்வவளங்களை மாற்றுவதற்கான திறனைக் கொண்டிருக்கின்றனர்.

**கொள்கைத் தலையீடுகள்**

- மின் ஆளுகையை மேம்படுத்துதல், தொழில்நுட்ப கல்வியை வலுப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு உதவுதல்
- வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவரும் வகையில் ஊரகப்பகுதிகளில் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்
- நிறுவனங்களின் வளர்ச்சியை நோக்கி அதிக இளைஞர்களை ஈர்க்கும் வகையில் மின் வணிகம் மூலமாக உலகச் சந்தையை அணுகுவதற்கான பயிற்சி அளித்தல் மற்றும் பன்னாட்டு வணிக கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல்
- சிறந்த சேவைகளை வழங்குவதற்கான மேலாண்மைச் செயல்முறைகளை வலுப்படுத்தும் வகையில், அரசு அலுவலகங்களுக்கு உதவி செய்வதற்காக திறன்வாய்ந்த மனித வளங்களின் இருப்புத் தன்மையை உறுதி செய்தல்

**இ. மதிப்பீடு, கண்காணித்தல் மற்றும் மறு ஆய்வு**

கொள்கை ஆவணமானது எந்தத் துறை / பிரிவு நடவடிக்கையைத் தொடங்க வேண்டும், அத்தகைய நடவடிக்கைக்குத் தேவையான வளங்கள் மற்றும் செயல்திறனுக்கான குறியீடுகள் ஆகிய விவரங்களுடன் செயல்திட்டமாக மாற்றப்படும். கொள்கை அடிப்படையிலான திட்டங்களைக் கண்காணிக்க இக்குறியீடுகள் அளவுகோலாக பயன்படுத்தப்படும். இக்குறியீடுகளை உருவாக்குதல், குறியீடுகளுக்கான தரவுகளைச் சேகரித்தல், அவற்றைச் செயல்முறைப்படுத்துதல் மற்றும் திட்டத்தில் தேவையான திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான அடிப்படையாக அமையும் தீர்வுகளை திட்டங்களில் உள்ளீடு செய்தல் ஆகியவற்றில் வெவ்வேறு பொறுப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

கொள்கை காலமான ஐந்தாண்டுகளில் இடைக்கால மதிப்பீடு மற்றும் இறுதி மதிப்பீடு மாநில அரசால் மேற்கொள்ளப்படும். இடைக்கால மதிப்பீட்டில், திட்டத்தின் சாதனைகள் மற்றும் குறைபாடுகள் கணக்கெடுக்கப்படும். இது ஆக்கப்பூர்வமான மாற்றம் மற்றும் செயல்படுத்தலுக்கு உதவும். இறுதி மதிப்பீடு கொள்கைக் காலத்தின் இறுதியில் மேற்கொள்ளப்படும்.

## 12. செயலாக்கத் திட்டம்

### 12.1 இளைஞர் கொள்கை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கையின் வெற்றிகரமான செயலாக்கமானது, அனைத்து முக்கிய பங்குதாரர்களின் பங்கேற்பினைப் பொறுத்துள்ளது. இவ்வாறு நடப்பதற்காக, அனைத்து பங்குதாரர்களான அரசு துறைகள், அரசு சாரா அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள் / விளையாட்டு அமைப்புகள், உள்ளூர் சுய ஆட்சி நிறுவனங்கள் மற்றும் மிக முக்கியமாக ஆற்றல் வாய்ந்த இளைஞர்கள் கொள்கையை ஏற்றுக்கொள்ள உதவுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். பெரும்பாலான இளைஞர்கள், கல்வி அல்லது வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளதால் கல்வி நிறுவனங்கள் வாயிலாக இளைஞர் கொள்கையைப் பரப்புவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். இந்நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் இளைஞர் கொள்கையானது இணைக்கப்படுதல் அவசியம். மக்கள் தொகையின் ஏனைய அனைத்து பிரிவினருக்கும் சென்றடைய ஊடகம் பயன்படுத்தப்படும். இளைஞர் கொள்கை குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையும், இதர சம்பந்தப்பட்ட துறைகளும் முன்னெடுத்து செல்லும். தொலைத் தொடர்பு சாதனங்களான வலைதளம், அலைபேசி தளம், சமூக ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம் போன்றவை பங்குதாரர்களை உணர்வடையச் செய்ய பயன்படுத்தப்படும்.

### 12.2 இளைஞர்களின் ஈடுபாட்டையும் பங்கேற்பையும் அதிகரித்தல்

இளைஞர்கள் எப்போதும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் அனைத்து திட்டங்களிலும் பங்களிக்க ஆர்வமாக இருப்பர். இளைஞர் கொள்கையின் கீழான முயற்சிகளை மேம்படுத்துவதற்காகவும், இளைஞர் பங்கேற்பையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கவும், அரசு தற்போதுள்ள தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், சாரண சாரணியர், நேரு யுவகேந்திரா இளைஞர் மன்றங்கள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், அரசிடம் பதிவு செய்துள்ள தேசிய பசுமை படைகள், அரசு சாரா அமைப்புகள், விளையாட்டு மன்றங்கள் போன்ற அமைப்புகள் வாயிலாக இளைஞர்களை அணுக வேண்டும். இளைஞர் திட்டம் குறித்த மாவட்ட ஆலோசனை குழுவானது திட்டங்களைக் கண்காணிக்க ஈடுபடுத்தப்படும். கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய, இளைஞர் தொலைபேசி இணைப்பு,

இளைஞர்களுக்கு ஆதரவையும் சேவைகளையும் வழங்க உதவி புரியும். அரசு திட்டங்களையும் திட்ட பணிகளையும் தெரிவிக்கிற முக்கிய நோக்கத்துடன் ஒரு இளைஞர் வலை தளம் மற்றும் சமூக ஊடக பக்கங்கள் உருவாக்கப்படும். இவை, திட்டங்களின் செம்மையான செயல்பாடுகள் பற்றி இளைஞர்களுக்கு பின்னூட்டம் மற்றும் கருத்துரைகளை அளிப்பதற்கு முக்கியமாக உதவிபுரியும்.

### 12.3 பல்வேறு பங்குதாரர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது, பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் வாயிலாக இளைஞர் கொள்கையைச் செயல்படுத்தி ஒருங்கிணைத்தாலும், பெரும்பான்மையான திட்டங்கள் உயர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வித் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் குடும்பநலன், நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி போன்ற துறைகளால் நடத்தப்படுகிறது. இளைஞர் கொள்கையின் கீழ் நடவடிக்கைகளை முன் எடுத்துச் செல்வதற்கு மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான இளைஞர் மேம்பாட்டிற்கான கல்வி மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை அரசு கண்டறிந்து ஈடுபடுத்தும்.

ஏனைய அமைச்சகங்கள் மற்றும் துறைகள் இளைஞர்களை குறிப்பாக முன்னிறுத்தும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வடிவமைத்து செயல்படுத்தும் போது, இளைஞர்களுக்கான தேவைகள் குறித்த ஆதாரம் சார்ந்த உள்ளீடுகளை அளிக்கும் பொறுப்பு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு உள்ளது. மொத்தத்தில், செயல்படுத்தும் உத்தி நிறுவனமயமாக்கப்படல் வேண்டும்.

### 12.4 வளங்களை திரட்டுதல்

இளைஞர் கொள்கையை செயல்படுத்துவதற்காக மனித, நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளங்கள் கண்டறியப்பட்டு திரட்டப்படுதல் அவசியம். அரசு, தனது சொந்த வளங்களை பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பலதரப்பட்ட மற்றும் இரு தரப்பு கொடையாளிகள், அறக்கட்டளைகள் மற்றும் அமைப்புகள் மற்றும் பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு எனும் கூறினையும் கருத்தில் கொண்டு அவர்களிடமிருக்கும் வளங்களைக் கண்டறிந்து திரட்டும். நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளங்களோடு தங்களின் நேரம், ஆற்றல் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வழங்க தயாராக இருக்கும் ஏராளமான இளைஞர்களையும் திரட்டுவதில் அரசு ஆர்வம் காட்டுகிறது.

## 12.5 பகுதி வாரியான அணுகுமுறைகள்

இளைஞர்கள், வயதில் மட்டுமல்லாமல், புவியியல் அமைப்புகள் உட்பட ஏனைய பிற பார்வைகளிலும் வேறுபட்டவர்களாக இருக்கின்றனர். உதாரணமாக தமிழகத்தில், சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் முக்கிய தொழில்கள் மற்றும் அந்தந்த தொழில்களைச் செய்வதற்குத் தேவையான திறன்களான மனப்பான்மை, அறிவு, திறன் மற்றும் வளங்களின் அடிப்படையில் வேறுபடுகிறார்கள். இந்த சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளில், உரிய திறன் மேம்பாட்டு மையங்கள் அரசால் தொடங்கப்படும். இந்த மையங்கள், இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மற்றும் சுய வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கான பயிற்சியை வழங்கும் பணியைச் செய்யும். இது தொடர்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்திருக்கும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரிகள், மாவட்ட அளவில் இத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான மையப்புள்ளிகளாகச் செயல்படும்.

## 12.6 ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

இளைஞர்கள் தொடர்பான பல்வேறு விவகாரங்களைக் குறித்து மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் கொள்கை உருவாக்குவதற்கான அடித்தளத்தை வழங்குகிறது. சான்றுகள் அடிப்படையிலான ஆய்வுகள், இளைஞர்களின் உண்மையான தேவைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், எதிர்காலச் செயல்பாடுகளுக்கான வரைபடத்தையும், மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த நடவடிக்கைகளையும் பரிந்துரைக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு, கொள்கைக் காலம் முழுவதிலும் இளைஞர்கள் குறித்த விவகாரங்களின் மீது பல்கலைக்கழகங்கள் ஆய்வு அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் மூலம் ஆய்வு நடவடிக்கையை துவங்குவதற்கான தேவையை அரசு அங்கீகரிக்கிறது. இந்த ஆய்வுகள், கொள்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய பகுதிகளையும் தொடர்புடைய ஏனைய சமூக விவகாரங்களையும் மையமாகக் கொண்டிருக்கும்.

## 12.7 மாநில இளைஞர் விருது

வளர்ச்சி மற்றும் சமூக சேவை குறித்த மிகச் சிறப்பான நடவடிக்கைகளை ஒப்புக் கொண்டு அங்கீகரிக்கும் வகையில், முதலமைச்சர் மாநில இளைஞர் விருது

அமைக்கப்பட்டு, ஒவ்வோராண்டும் சுதந்திர தினத்தன்று **15** முதல் **35** வயதிற்குட்பட்ட **3** ஆண்கள் மற்றும் **3** பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.**50,000/–** க்கான ரொக்கமும், சான்றிதழ் மற்றும் ஒரு பதக்கத்தையும் உள்ளடக்கும்.

## 13. தமிழ்நாடு மாநில இளைஞர் கொள்கையின் மறுஆய்வு

இந்தக் கொள்கை **5** ஆண்டுகளுக்குப்பின் மறுஆய்வு செய்யப்பட்டு, வருங்காலத் தேவைகளின் அடிப்படையில் தேவையான கொள்கை மாற்றங்கள் செய்யப்படும்.

## 14. பார்வைகள்


செயல்திட்டம் மற்றும் புள்ளிவிவரம் 2013–2014, பள்ளி கல்வி துறை, தமிழ்நாடு அரசு.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2001

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2011

கர்நாடக மாநில இளைஞர் கொள்கை – 2013

கேரளா மாநில இளைஞர் கொள்கை – 2011

மகாராஷ்டிர மாநில இளைஞர் கொள்கை – 2010

தேசிய இளைஞர் கொள்கை – 2014

ஒடிசா மாநில இளைஞர் கொள்கை – 2013

பார்த்தசாரதி K. (2013), தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாடு (ED), IECD, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

ரெகு V. (2011), இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் (ED), RGNIYD, ஸ்ரீபெரும்புதூர்

சரஸ்வதி S. (2008), புதிய ஆயிரமாண்டுகளில் இந்திய இளைஞர்கள், RGNIYD, ஸ்ரீபெரும்புதூர்

செந்தில்குமார் G. (2006), திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமப்புற மேம்பாட்டில் இளைஞர்கள் பங்கேற்பு. (வெளியிடப்படாத முனைவர் ஆய்வு கட்டுரை)

தமிழ்நாட்டின் 12 ஆம் ஐந்தாண்டு திட்டம் 2012–2017

தமிழ்நாடு திட்டக் குழுவின் அறிக்கை – 2013

தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023, தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான உத்தி திட்டம், தமிழ்நாடு அரசு.

ஜார்கண்ட் மாநில இளைஞர் கொள்கை – 2007

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழ்நாடு அரசு, 2013–14